அலகு 1

# பேசும் பொம்மை



குடும்பம் இந்தியக் கலாச்சாரத்தின் அடிநாதமாகும். குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமான இக்கருத்தின் அடிப்படையில் இம்முதல் அலகு வடிவமைக்கப் பட்டுள்ளது.

உறவுப் பெயர்கள், அவர்களது பொறுப்புகள் பற்றிய கருத்துருவாகும் வண்ணம் செயல்பாடுகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

குறிப்பிட்ட இரு பொருட்களை / கூட்டங்களை ஒப்பிட்டு பெரியது சிறியது, கூடுதல் குறைவு, உயரமானது குட்டையானது, நீளமானது குட்டையானது மற்றும் இருக்கும் இடங்களை ஒப்பிட்டு அருகில் தூரத்தில், மேலே கீழே, உள்ளே வெளியே, பெரியது சிறியது போன்ற கணிதக் கருத்துக்களை அறிந்து கொள்ள உதவும் வண்ணம் முதல் அலகும் செயல்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அறிமுகம் செய்யும் சொற்கள் :

அம்மா, அப்பா, அக்கா,
தாத்தா, பாட்டி

அறிமுகம் செய்யும் எழுத்துக்கள் :

அ, ப், ம், க், த், ட், பா, மா, கா, தா, டி

# வகுப்பு - 1

## முதல் வகுப்புக் குழந்தை கற்கும் வழி...

1. குறிப்பிட்ட கருத்தோடு தொடர்புடைய பாடல்/படக்கதை/கதை/உரையாடல்/ எளிய விளக்கக் குறிப்பு ஆகியவற்றைக் கேட்டு/பார்த்துக் கலந்துரையாடி அனுபவம் பெறுதல்.
2. அதன் அடிப்படையில் தனக்கு விருப்பமான சொல்லை/சொற்களை அப்பாடப்பகுதியிலிருந்து இனம் கண்டு வட்டமிடுதல்.
3. அச் சொல்லில்/ சொற்களில் இடம் பெற்றுள்ள எழுத்துக்களைப் பலவித செயல்பாடுகள் வாயிலாக இனம் காணுதல்.
4. அவற்றைச் சரியாக ஒலித்துப் பழகுதல்.
5. வரிவடிவம் எழுதிப்பழகுதல்.
6. வாசித்தல். (ஊக வாசிப்பு, புரிந்து வாசிப்பு)
7. கற்ற எழுத்துக்கள் இடம் பெறும் வேறு சொற்களை வாசித்தல்.
8. தானாகப் புதிய சொல்/ சொற்களை உருவாக்கி வாசித்தல்/ எழுதுதல்.
9. தான் கற்ற சொற்களைப் பயன்படுத்திப் புதிய வாக்கியம் உருவாக்குதல்.
10. கற்ற சொல்லில்/ சொற்களில் இடம் பெற்றுள்ள ஒலித் துணைக் குறியீட்டை/ குறியீடுகளை இனம் காணுதல்; அவ்வொலித் துணைக் குறியீட்டை/ குறியீடுகளைப் முன்னர் கற்ற மெய் எழுத்துக்களில் பயன்படுத்தி உயிர் மெய்யெழுத்துகள் உருவாக்கி சொல்லி/எழுதிப் பழகுதல்; புதிய சொற்கள் உருவாக்குதல்

## அலகு வாரியாக அறிமுகமாகும் சொற்கள்

1. பேசும் பொம்மை - அப்பா, அம்மா, அக்கா, தாத்தா, பாட்டி
2. வீடும் கூடும் - எலி, வடை, ஆமை, வீடு
3. மழை - இடி, மழை, தவளை, மின்னல், சன்னல், ஈரம், செடி
4. விதைப்போம் மகிழ்வோம் - ஐஸ்வர்யா, தேன், ஏர், நிலம், பயிர்,
5. பூஞ்சோலை - பூக்கள், அணில், பழம், காய், வெள்ளை, முல்லை, கொத்து
6. அதிசயத் திருவிழா - திருவிழா, உழவூர், பருந்து, புறா, ஊர், ஊஞ்சல்
7. அறுசுவை - உணவு, கோழி, மான், குரங்கு
8. குளித்துக் குடி - யானை, குட்டி
9. வா..வா.. நாய்க்குட்டி - ஓணான், நாய், பசு, ஒட்டகம்
10. நம்மைச்சுற்றி - பலூன் , குண்டூசி, தென்னை
11. வேகம் - பௌர்ணமி, சௌமியா
12. ஒற்றையா ?இரட்டையா? - டிங்கு, மஞ்சு

# அலகு வாரியாக அறிமுகமாகும் எழுத்துகள்

| உயிர் எழுத்து | மெய் எழுத்து | உயிர்மெய் எழுத்து | ஒலித் துணைக் குறியீடு | உருவாகும் உயிர் மெய் எழுத்து |
|---|---|---|---|---|
| அ | ப்,ம்,க், த்,ட் | பா,மா,கா,தா,டி | ா ,ி | பி,மி,கி,தி |
| ஆ, எ | ல், வ் | லி, டை, மை, வீ, டு | ை , ீ – | லை, வை, பை, மை, கை, தை, டை |
| இ, ஈ | ன் , ள், ர், ச் | ன,ள,ர,ச | ெ – | பெ, மெ, கெ, தெ, டெ, லெ, வெ, னெ, ளெ, ரெ, செ |
| ஐ, ஏ | ய்,ந் | ய, ந | ே – | பே, மே, கே, தே, டே, லே, வே, னே, ளே, ரே, சே, யே, நே |
| ....... | ண், ழ் | ண , ழ | ொ– | பொ, மொ, கொ, தொ, டொ, லொ, வொ, னொ, ளொ, ரொ, சொ, யொ, நொ, ணொ, ழொ |
| உ , ஊ | ற் | ற | பு | பூ, வு-வூ, கு-கூ, மு-மூ |
| ....... | ....... | கோ | ோ | போ, மோ, கோ, தோ, டோ, லோ, வோ, நோ, ரோ, சோ, யோ, ணோ, ழோ, றோ, |
| ....... | ....... | கு | ....... | ....... |
| ஒ, ஓ | ....... | ....... | ....... | ....... |
| ....... | ....... | தூ, டூ | | லூ, நூ, ணூ |
| ஔ | ....... | ....... | ௌ | பௌ, மௌ,கௌ, தௌ, டௌ, வௌ, ளௌ, சௌ, யௌ, நௌ, ணௌ, ழௌ, றௌ |
| ...... | ஞ் , ங் | சு | | |

# கால அட்டவணை

| அலகு | பெயர் | மணி நேரம் | நிகழ்வுகள் | நேரம் | English | IT | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பேசும் பொம்மை | 10 | அழகு பொம்மை | 4 day | 188 days × 45 minuts | 188 days × 45 minuts | 37½ |
| | | 7½ | பொம்மை அலறியது | 3 day | | | |
| | | 12½ | பொம்மையைத் தேடி | 5 day | | | |
| | | 7½ | (கணிதம்) | 3 day | | | |
| 2. | வீடும் கூடும் | 5 | இடம் தருவாயா? | 2 day | | | 45 |
| | | 7½ | எலி வீடு | 3 day | | | |
| | | 10 | எலிச்சண்டை | 4 day | | | |
| | | 7½ | ஏமாந்த எலி | 3 day | | | |
| | | 7½ | குவிகளே குருவிகளே | 3 day | | | |
| | | 7½ | (கணிதம்) | 3 day | | | |
| 3. | மழை | 10 | வானில் மேகம் கூடுது | 4 day | | | 37½ |
| | | 7½ | குளம் நிறைந்தது | 3 day | | | |
| | | 7½ | தண்ணீரும் தவளையும் | 3 day | | | |
| | | 12½ | (கணிதம்) | 5 day | | | |
| 4. | விதைப்போம் மகிழ்வோம் | 7½ | பசி ஆற | 3 day | | | 40 |
| | | 7½ | விதைத்தான் விளைந்தது | 3 day | | | |
| | | 7½ | விளைச்சல் பெருக | 3 day | | | |
| | | 7½ | தேன் தேன் தேன் | 3 day | | | |
| | | 10 | (கணிதம்) | 4 day | | | |
| 5. | பூக்களும் காய்களும் | 10 | வண்ண வண்ணப் பூக்கள் | 4 day | | | 37½ |
| | | 12½ | மலைத்தோட்டம் | 5 day | | | |
| | | 15 | (கணிதம்) | 6 day | | | |
| 6. | ஏமாற்றாதே ஏமாறாதே | 7½ | உழவூருக்குப் போவோமா? | 3 day | | | 37½ |
| | | 10 | திருவிழா நடக்குமா? | 4 day | | | |
| | | 10 | அதிசயத் திருவிழா | 4 day | | | |
| | | 10 | (கணிதம்) | 4 day | | | |
| | | | | 94 days | | | 235 |

# அலகு வலைச்சட்டம் - அலகு - 1, பேசும் பொம்மை (தமிழ்)

| கருத்துகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் எழுத்துகள் / மொழிக்கூறுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| ❖ குடும்பம் பற்றி தன் கருத்தை / அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதன் வாயிலாகக் கலந்துரையாடலில் பங்கேற்கலாம். | கலந்துரையாடல் | ❖ குடும்பம் தொடர்பான ஆசிரியையின் வினாக்களுக்கு விடையளிப்பதன் வாயிலாகக் கலந்துரையாடல்களில் பங்கேற்கிறார்கள். |
| ❖ குடும்பம் தொடர்பான படங்களை உற்றுக்கவனித்தால் அதிலுள்ள கருத்து / கதாபாத்திரங்கள் / பொருட்கள் / நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கூறலாம். | படக்கதை வாசிப்பு | ❖ படங்களைப் பார்த்து ஆசிரியையின் வினாக்களுக்கு விடைக் கண்டு பிடித்துக் கூறுவதன் வாயிலாகக் கதை சொல்கிறார்கள். |
| ❖ குடும்பம் பற்றிய பாடலை மெட்டமைத்துப் பாடும்போது இனிமையாக இருக்கிறது. | பாடல் கேட்டல் / பாடுதல் | ❖ குடும்பம் தொடர்பான பாடலைத் தனியாகவும் குழுவாகவும் ஆசிரியைப் பாடுவதைக் கேட்டு அதுபோல் இசையோடு பாடு கிறார்கள். |
| ❖ குடும்பம் பற்றிய பாடலை செய்கையோடு பாடும்போது பார்க்கவும் கேட்கவும் இனிமையாக இருக்கிறது. | கதை கேட்டல் / சொல்லுதல் | ❖ குடும்பம் தொடர்பான பாடலில் உள்ள உறவுப் பெயர்களைப் ஒலிப்புமுறை, வரிவடிவம் ஆகியவற்றை இனம் கண்டு வாசிக்கிறார்கள் / எழுதுகிறார்கள். |
| ❖ குடும்பம் பற்றிக் கேட்டு அனுபவித்த பாடலில் உள்ள எழுத்துகள் / சொற்களை இனம் காணாமலே பாடலாம். | அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, பாட்டி | |
| ❖ இனம் காணாமல் பாடிய அனுபவத்தின் வாயிலாகக் குறிப்பிட்ட சொற்களை இனம் காணலாம். | | |

- ஒலி வேறுபாட்டை உணர்ந்தால் குறிப்பிட்ட எழுத்தை இனம் காணலாம்.
- பார்த்து உணர்ந்ததை அதே வடிவில் வரையலாம்.
- ஒவ்வொரு எழுத்திற்கும் (அ, ப், ம், க், த், ட், பா, மா, கா, தா, டி) அதற்கேயுரிய எழுதும் முறை, வடிவம், ஒலிப்பு உண்டு. அம் முறைப்படிதான் சொல்ல / எழுத வேண்டும்.
- தான் கேட்டு ரசித்ததை பிறரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டு மெனில் அதேபோல் கூற வேண்டும்.
- ஒரே ஒலித்துணைக் குறியீடுகள் எழுத்தின் வரிவடிவத்திலும் உச்சரிப்பிலும் வேறுபாட்டை உருவாக்குகின்றன.
- ஒரே ஒலித்துணைக் குறியீடு ஒவ்வொரு எழுத்துடன் சேரும் போதும் அதன் வடிவத்திலும் ஒலிப்பிலும் மாறுபாட்டை உருவாக்குகிறது.
- தான் கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி, தன் மனதில் உள்ள சில கருத்துக்களை எழுதலாம்.

அ

ப், ம், க், த், ட்

பா, மா, கா, தா, டி

ா - ி

பி, மி, கி, தி

- ஒலித்துணைக் குறியீடுகளின் (ா - ி) ஒலிப்பு முறை, வரிவடிவம் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பைப் புரிந்து கொண்டு தான் கற்ற ஒலித்துணைக்குறியீடுகளை வேறு உயிர்மெய்யெழுத்துக்களின் பயன்படுத்தும்போது ஏற்படும் ஒலி மற்றும் வரிவடிவ வேறுபாடுகளை இனம் கண்டு வாசிக்கிறார்கள். / எழுதுகிறார்கள்.
- கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி பொருள் உள்ள சொற்கள் உருவாக்கு கிறார்கள்.

# அலகு வலைச்சட்டம் - அலகு - 1, பேசும் பொம்மை (சூழ்நிலையியல், கணிதம்)

| கருத்துகள் | செயல்முறை | முக்கிய கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ அப்பா, அம்மா, அக்கா, அண்ணன், தாத்தா, பாட்டி, தம்பி போன்றவர்கள் சேர்ந்து வாழ்வதே குடும்பம்.<br>❖ வேறு வீட்டில் / ஊரிலும் நம் உறவினர்கள் இருக்கிறார்கள்.<br>❖ நம் வீட்டில் நடைபெறும் சில விழாக்களில் அவர்களும் வந்து கலந்து கொள்வார்கள். | பட வாசிப்பு ,<br>பாடல்,<br>கலந்துரையாடல் | ❖ தன் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் உறவுப் பெயர்களைக் கூறுகிறான்.<br>❖ தன் உறவினர்களை தன் வீட்டில்/ வேறு வீட்டில்- ஊரில் வசிப்போர் என வகைப்படுத்துகிறான்.<br>❖ பிறந்த நாள் போன்ற தம் வீட்டில் கொண்டாடப்படும் விழாக்களில் வேறு வீட்டில்- ஊரில் வசிக்கும் உறவினர்களும் கலந்து கொள்கின்றனர் என்ற பொது முடிவெடுக்கிறான். |
| ❖ இரண்டு பொருட்களை அவற்றின் வடிவத்தின் அடிப்படையில் ஒப்பிடலாம். ஒப்பிட்டுக் கூற அதற்குரிய சொற்கள் உள்ளன.<br>❖ நிமிர்ந்து நிற்கும் இரண்டு பொருட்களை உயரத்தின் அடிப்படையில் ஒப்பிடலாம். ஒப்பிட்டுக் கூற அதற்குரிய சொற்கள் உள்ளன.<br>❖ வெவ்வேறு இடங்களில் இருக்கும் இரண்டு பொருட்களை ஒப்பிட்டு அவை எங்கிருக்கிருக்கின்றன என்று கூற சில சொற்களைப் பயன்படுத்துகிறோம். | பட வாசிப்பு | ❖ இரண்டு பொருட்களை ஒப்பிட்டு அவற்றுள் பெரி யது எது சிறயது எது என்று கூறுகிறான்.<br>❖ உயரத்தின் அடிப்படையில் ஒப்பிட்டு உயரமானது எது குட்டையானது எதுவெனக் கூறுகிறான்.<br>❖ வெவ்வேறு இடங்களில் இருக்கும் இரண்டு பொருட்களை ஒப்பிட்டு அவை எங்கிருக்கிருக்கின்றன (உள்ளே / வெளியே , மேலே / கீழே, முன்னால் / பின்னால் ) என்று கூறுகிறாள். |


The Teacher
An intelligent mind
to think and know how to help each child
Eyes
To see the marvellous works of her students
Ears
To hear all the stories that the kids tell her
A mouth
To smile to her kids every morning
A heart
That loves all the children
Hands
To hold, help and hug
A teacher's smock
So they can be easy to find all around the city
Feet
To bring the kids to interesting places outside the school

# ஆசிரியர் கவனத்திற்கு...

- ❖ குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவும் தொடர்ந்து நிலைநிறுத்தவும் வேண்டி ஒவ்வொரு அலகும் ஒரு கதைக்களத்தின் அடிப்படையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ❖ முதலில் கொடுக்கப்பட்டுள்ள கதைச் சுருக்கத்தை நன்கு வாசித்துப் புரிந்து கொள்வது நன்று.
- ❖ கதையோட்டம் கூறும் போது குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் சொல்ல வேண்டும்.
- ❖ கதையோட்டம் நிறுத்தும் போது குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும் கேள்விகள் கேட்டு நிறுத்த வேண்டும்.
- ❖ நாம் எழுப்பும் வினாவிற்கு குழந்தைகள் கூறும் பதில்களே வட்டாரப் பாடப்புத்தகம்.
- ❖ இவ்வட்டாரப் பாடப்புத்தகத்தைப் பயன்படுத்தி ஊக வாசிப்பு நடத்த வேண்டும்.
- ❖ தினமும் கதை நேரம்/ பாடல் நேரம் திட்டமிட வேண்டும்.
- ❖ இவ்வேளையில் கூற உதவும் சில கதைகள்/ பாடல்கள் பாடப்புத்தகத்தில் உள்ளன.
- ❖ உங்கள் குழந்தைகளுக்குக் கூறுவதற்கு / பாடுவதற்கு ஏற்ற கதைகளை / பாடல்களை திரட்டிக் கொள்ளுங்கள்.
- ❖ குழந்தைகளும் தங்களுக்குத் தெரிந்த கதைகள்/பாடல்கள் கூற / பாட வாய்ப்பளியுங்கள்.
- ❖ நடைமுறைப்படுத்திய ஒவ்வொரு செயல்பாட்டையும் கீழ்க்காணும் தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடவேண்டும்.

  அ. எல்லாக் குழந்தைகளும் ஆர்வத்தோடு பங்கேற்கிறார்கள்; எதிர்பார்த்த கற்றல் அடைவுகளை அடைகிறார்கள்.

  ஆ. எல்லாக் குழந்தைகளும் ஆர்வத்தோடு பங்கேற்கிறார்கள்; சிலர் எதிர்பார்த்த கற்றல் அடைவுகளை அடைவதில்லை.

  இ. ஆர்வத்தோடு பங்கேற்கவில்லை; எதிர்பார்த்த கற்றல் அடைவுகளை அடையவில்லை.
- ❖ கற்றலில் பின்தங்கியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான செயல்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துங்கள்.
- ❖ கற்றல் துணைக்கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக்கொள்ளுங்கள்.
- ❖ தொடர்புகள், பொருத்தமான சொற்கள் பயன்படுத்தி கருத்துத் தொடர்புடன் வரிகளைச் சேர்க்கலாம்.
- ❖ கருத்துத் தொடர்புடன் பாடலின் தாளத்திற்கேற்ப வரிகள் சேர்த்து பாட வாய்ப்பளியுங்கள்.

அலகு - 1

# பேசும் பொம்மை

**கதைக்களம்**

நிகழ்வு 1

கதையோட்டம்

இன்று அகிலாவின் பிறந்த நாள். "அகிலா .. ஓடி வா.. எல்லோரும் இப்ப வந்திருவாங்க!" அம்மா அவசரப்படுத்தினாள். அம்மா அகிலாவைக் குளிப்பாட்டினாள். தலைசீவிப் பூச்சூடினாள். புத்தாடை அணிவித்தாள். "அம்மா! தாத்தாவும் பாட்டியும் எப்போது வருவார்கள்? மாமாவும் அத்தையும் எப்போது வருவார்களா?"அம்மாவை நச்சரித்துக் கொண்டிருந்தாள். "கிரீச்..!" ஒரு கார் நின்றது. "ஹையா பாப்பா வந்தாச்சு! அகிலா துள்ளிக் குதித்து வாசலுக்கு ஓடினாள். அனைவரும் ஒன்று சேர்ந்தனர். கேக் வெட்டினர். பிறந்தாள் கொண்டாடினர். அகிலாவிற்கு அனைவரும் பிறந்தநாள் பரிசளித்தனர். அகிலா ஒவ்வொன் றாகப் பிரித்துப் பார்த்தாள். "ஆகா..! அருமை!" மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள். பாட்டுப்பாடினாள்.

பாடப்பகுதி

தனக்குக் கிடைத்த ஒவ்வொரு பரிசு பற்றியும் பாட்டுப் பாடினாள்.

நிகழ்வு 2

கதையோட்டம்

அவளுக்குக் கிடைத்த பரிசுகளுள் பேசும் பொம்மையும் ஒன்று. பேசும் பொம்மை கிடைத்த பின் அகிலா நாயைக் கண்டு கொள்ளவில்லை. அதனால் நாய்க்குப் பொம்மை மீது பயங்கர கோபம். விருந்து முடிந்ததும் அகிலா தன் நண்பர்களுடன் விளையாடத் தோப்பிற்குப் புறப்பட்டாள் ."நானும் வருகிறேன்" என்று பொம்மையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. நாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. " என்ன விளையாட்டு விளையாடலாம்?'' நண்பர்கள் கேட்டனர். ''..................... விளையாடலாம்'' என்று பேசும் பொம்மை சொன்னது. அனவரும் விளையாடத் தொடங்கினர். நாய் தக்க நேரம் பார்த்துக் கோபத்தோடு காத்திருந்தது.

பாடப்பகுதி

அனைவரும் ஒளிந்து விளையாடினர். தக்க நேரம் பார்த்திருந்த நாயோ பேசும் பொம்மையைக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டது. தீயணைப்பு வீரர் வந்து பொம்மையைக் காப்பாற்றினார்.

## நிகழ்வு 3

**கதையோட்டம்**

அகிலாவின் பிறந்தநாளுக்குத் தோழி பாலாவும் மாலாவும் தாமதமாக வந்தார்கள். "அகிலா.. அகிலா.." வீட்டு வாசலில் நின்று மாலா அழைத்தாள். அகிலாவின் அம்மா வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தாள். "அகிலா எங்கம்மா?" பாலா கேட்டாள். "அவளும் நண்பர்களும் தோப்பிற்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வரும் நேரமாச்சு. நீங்க வீட்டிற்குள் வந்து உட்காருங்க" அம்மா சொன்னாள். "அவர்கள் வரும் வரை நாங்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" இருவரும் சொன்னார்கள்: வீட்டைச் சுற்றிப் பார்த்தனர்.

**பாடப்பகுதி**

அவர்கள் மரத்திற்கு மேலே பறக்கும் பறவை.. கீழே மேய்ந்து கொண்டிருந்த கோழிக்குஞ்சுகள்.. கூட்டிற்குள் இருந்த குஞ்சுகள்.. வெளியே நின்ற கோழி.. உயரமான தென்னை, குட்டையான தென்னை.... என்று அனைத்தையும் பார்த்தனர். "அவர்கள் வர நேரமாகும் போல் இருக்கிறது. வாருங்கள். கொஞ்சம் பலகாரம் சாப்பிடுங்கள்." அகிலாவின் அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் பலகாரம் சாப்பிட்டனர்.

## நிகழ்வு 4

**கதையோட்டம்**

வீட்டிற்குத் திரும்பினாள் அகிலா. தோழிகள் இருவரும் அகிலாவின் பேசும் பொம்மையைப் பார்த்து ஆச்சரியப் பட்டனர். அந்த ஒரு நாளிலேயே பேசும் பொம்மையும் அகிலாவும் நல்ல நண்பர்களாகிவிட்டனர். மறுநாள் அகிலா பள்ளிக்குச் சென்றுவிட்டாள். அகிலா இல்லாமல் கஷ்டப்பட்ட பொம்மையோ அகிலாவின் வரவை எதிர்பார்த்து முன் பக்கத் திண்ணையில் காத்திருந்ததது.

**பாடப்பகுதி**

அகிலாவிற்காகக் காத்திருந்த பேசும் பொம்மையை நாய் துரத்தியது. பொம்மை பயந்து ஓடியது. நெரிசல் மிகுந்த சாலையில் ஆட்களின் பின்னால் ஒளிந்து கொண்டது. . ஆனால்... திரும்பி வர வழி தெரியவில்லை. டீக் கடையில் ஒரு ஆளிடம் செல்போன் வாங்கி வீட்டிற்குப் போன் செய்தது.

வரும் வழியில் ஒரு ஏழைக் குழந்தையை அகிலா பார்த்தாள். தனக்குப் பிடித்த பேசும் பொம்மையை அக்குழந்தைக்குப் பரிசாகக் கொடுத்தாள். மகிழ்ச்சியாக வீடு திரும்பினாள்.

**வகுப்பிற்குச் செல்லும் முன்...**

1. இவ்வலகின் கதைச் சுருக்கத்தை வாசித்துக் கதையை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும்.
2. கதையின் ஒரு நிகழ்வை கருத்தலகிற்கு முன் சொல்லி நிறுத்தி குழந்தைகள் புதையலைத் தேடும் ஆர்வத்துடன் பாடப் பகுதியைப் பார்க்க, வாசிக்கத் தூண்ட வேண்டும்.
3. சார்ட்டில் எழுத வேண்டிய பகுதிகளைச் சார்ட்டில் எழுதிக் கொள்ள வேண்டும்.
4. தேவையான துணைக் கருவிகள் ?

## நிகழ்வு - 1

# அழகு பொம்மை

**நான் வரைவதென்ன?**

**நோக்கம்:**

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்துதல்.
- எழுத்து முன் பயிற்சி

நான் வரைவதென்ன என்று கேட்டுக் கேட்டு வீடு வரையுங்கள். கலந்துரையாடுங்கள்..



**அதிக தோசை சுடுவது யார்?**

**நோக்கம்:**

- எழுத்து முன் பயிற்சி

"ஐந்து நிமிடத்திற்குள் உங்களால் எத்தனை தோசை வரைய முடியும்?" என்று கேட்டு குழந்தைகள் தங்கள் சிலேட்டில் தோசை சுட வாய்ப்பளியுங்கள்.



## இப்போது கூற முடியுமா?

**நோக்கம்:**

- ஊகித்துக் கூற வாய்ப்பளித்தல்
- எழுத்து முன் பயிற்சி

நான் வரைவதென்ன என்று கேட்டுக் கேட்டு வட்டம் வரையத் தொடங்கி... அகிலா வரைதல்.



## இவள் யார் தெரியுமா?

**நோக்கம்:**

- ஆசிரியை கூறுவதைக் கவனித்துக் கேட்டல்

அகிலா அறிமுகம்-உங்களைப் போல் 5 வயதுப் பெண் குழந்தை -வட்டமுகம் -சுருண்ட முடி - துறுதுறுவென்று இருப்பாள் -அவளை எல்லோருக்கும் பிடிக்கும்

அகிலா குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள் தெரியுமா?

| | | |
|---|---|---|
| **அப்பா** | - | **அறிவழகன்** |
| **அம்மா** | - | **மதியழகி** |
| **அண்ணன்** | - | ..............., |
| **அக்கா** | - | ................ |
| **தாத்தா** | - | ............ |
| **பாட்டி** | - | ................ |
| **அப்பா** | - | **விவசாயி** |
| **அம்மா** | - | **குடும்பத்தலைவி** |
| **அவர்கள் ஊர்** | - | ............... |

### கரும்பலகை/சார்ட்டில் எழுதும் போது . . .

√ *நீங்கள் எழுதுவதை எல்லாக் குழந்தைகளும் கவனிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்*

√ *வரி வடிவத்தை எங்கு தொடங்கி எங்கு முடிக்கிறீர்கள் என்பதைக் குழந்தைகள் கவனிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.*

√ *எழுதும் முறையறிந்து எழுதுங்கள்.*

√ *கரும்பலகையில் ------------ கோடு வரைந்து அதில் எழுத்துகள் அமர்ந்திருக்குமாறு எழுத வேண்டும்.*

√ *அதேபோல் கோட்டின் மேல் கரும்பலகையில் குழந்தைகளும் எழுத வாய்ப்பளிக்க வேண்டும்.*

√ *மணல் எழுத வாய்ப்பளிக்கலாம்.*

√ *நீங்கள் எழுதிய எழுத்தின் மேல் எழுத வாய்ப்பளிக்கலாம்.*

√ *எழுதும் போது சொல்க் கொண்டே எழுதுங்கள்.*

√ *குழந்தைகளும் அவ்வாறே செய்ய வாய்ப்பளியுங்கள்.*

√ *மெல்ல அவரவர் சிலேட்டில் . . . பிறகு ஏடுகளில் எழுத வாய்ப்பளியுங்கள்.*

## கலந்துரையாடல்

**நோக்கம்:**

- தன் அனுபவம் கூறுதல்

- உங்கள் குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
- யார் யார் வீட்டில் தாத்தா பாட்டி இருக்கிறார்கள்?
- அப்பா என்ன செய்கிறார்?
- அம்மா.......... ?

போன்ற வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## கலந்துரையாடல்

**நோக்கம்:**

- பட வாசிப்பு

“அகிலாவையும் அகிலாவின் குடும்பத்தினரையும் பார்க்க ஆசையா?'' என்று கேட்டுப் புத்தகத்திலுள்ள படத்தைப் பார்க்கத் தூண்டுங்கள். படத்தை வாசிக்கப் போதுமான கால அவகாசம் கொடுங்கள்.

**படத்தின் அடிப்படையில் இப்படத்தில்...**

- யார் யார் இருக்கிறார்கள்?
- இது யார் வீடு?
- அகிலா எங்கிருக்கிறாள்?
- அம்மா என்ன செய்கிறாள்?
- அப்பா என்ன செய்கிறார்?
- ஏன் அலங்காரம்?..... போன்ற கேள்விகள் கேட்டு உரையாடுங்கள்.

**படவாசிப்பு:**

- இது வாசிப்பின் முதற் படியாகும்.
- ஆரம்ப கட்டத்தில் படத்தில் யார் யார் இருக்கிறார்கள்? என்னென்ன இருக்கிறது? என்ற வினாவிற்கு ஒரு வார்த்தையில் ஒரு ஆள், ஒரு பையன், பறவை, கோழி என்று குழந்தைகள் பதில் கூறலாம்.
- இதன் அடுத்த கட்டமாக உயரமான / குட்டையான ஆள் என்றோ, வானில் காகம் பறக்கிறது என்றோ கூற வேண்டும்.
- படவாசிப்பிலும் வளர்ச்சிக் காண வேண்டும்.

## வீட்டு விழா

**நோக்கம்:**

- ஊக வாசிப்பு

குழந்தைகள் கூற கரும்பலகையில் எழுதுங்கள். வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவற்றை வாசித்துக் காட்டுங்கள். சில குழந்தைகளுக்காவது அச்சொற்களை வாசிக்க/ இனம் காண வாய்ப்பளியுங்கள்.

**கலந்துரையாடல்**

**நோக்கம்:**

- தன் அனுபவம் கூறுதல்

- உங்கள் வீட்டில் இது போல் விழா நடந்துள்ளதா?
- என்னென்ன விழாக்கள் நடந்துள்ளன?
- அவ்விழாவின் போது யார் யார் என்னென்ன செய்வார்கள்?
- வேறு வீட்டிலிருந்து / வெளியூரிலிருந்து யார் யார் வந்தார்கள்?

போன்ற வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடி குழந்தைகள் கூறும் உறவுப் பெயர்களைக் கரும்பலகை/ சார்ட்டில் எழுதுங்கள். அவற்றை பல வண்ணங்களில் எழுதுவது நல்லது. எழுதுவதைக் குழந்தைகள் கவனிக்குமாறு எழுதுங்கள்.

**கரும்பலகையில் / சார்ட்டில்...**

**நோக்கம் :**

- வரிவடிவம் எழுதும் முறையைக் கவனித்தல்
- ஊக வாசிப்பு

கரும்பலகையில்/ சார்ட்டில் எழுதியதைப் பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்திக் குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

**கதையோட்டம் -1**

**நோக்கம்:**

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த
- பாடப்பகுதிக்குள் ஆர்வத்துடன் நுழைய ஆயத்தப் படுத்துதல்

ஆம். இன்று அகிலாவிற்குப் பிறந்த நாள். அம்மா, அப்பா, சேர்ந்து விருந்து சமைத்தனர். அண்ணன் வீட்டை அலங் கரித்தான். அக்கா கேக் எல்லாம் எடுத்து மேசையில் வைத்தாள். விருந்து தயார். அம்மா அகிலாவைக் குளிப்பாட்டி வைத்து தலை சீவினாள். தலையில் பூச் சூடினாள். புத்தாடை அணிவித்தாள். அப்பா வாச லில் காத்திருந்தார்.

“தாத்தாவும் பாட்டியும் எப்போது வருவார்கள்? மாமாவும் அத்தையும் வருவார்களா? பாப்பாவைக் கூட்டி வருவார்களா?”அகிலா அம்மாவை நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

**பாடவாசிப்பு (கணிதம்)**

பக்கம் 8, 9

வீட்டிற்கு உள்ளே யார் யார் இருக்கிறார்கள்?

வீட்டிற்கு வெளியே யார் யார் இருக்கிறார் கள்?

மேசை மேல் இருப்பது என்ன?

மரத்திற்குக் கீழ் யார் யார் இருக்கிறார்கள்?

மரத்திற்குக் மேலே யார் யார் இருக்கிறார்கள்?

இங்குள்ளவர்களுள் உயரமானவர் யார்?

இங்குள்ளவர்களுள் குட்டையானவர் யார்?

எது பெரியது? காரா? பொம்மையா?

எது சிறியது? நாயா? பொம்மையா?

மரத்தில் கூடுதலாக இருப்பது இலையா? பழமா?

“என்னென்ன பரிசுகள் கிடைக்கும்?” என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

“விருந்து முடிந்ததும் நாங்கள் நம்ம தோப்பில் போய் விளையாடலாமா?” அப்பாவிடம் அனுமதி வாங்கினாள்.

”ஹையா பாப்பா வந்தாச்சு !” அகிலா துள்ளிக் குதித்து வாசலுக்கு ஓடினாள்.

அனைவரும் ஒன்று சேர்ந்தனர். கேக் வெட்டினர். விருந் துண்டனர். நண்பர்கள் கூடினர். அகிலாவிற்குக் கிடைத்தப் பரிசுப் பொட்டலங்களை ஒவ்வொன்றாகப் பிரித்தனர்.

“ஆகா! அருமை!! ” ஒவ்வாரு பரிசுப் பொட்டலத்தைப் பிரிக்கும் போதும் மகிழ்ச்சிக் கூச்சலிட்டனர்.

- அகிலாவின் பிறந்த நாளுக்கு யார்யார் வந்திருப்பார்கள்?
- என்னென்ன பரிசுகள் தந்திருப்பார்கள்?

குழந்தைகள் கூறுவதைக் கரும்பலகையில் எழுதுங்கள். அதை வாசித்துக் காட்டுங்கள்.

## பேசும் பொம்மை (பாடல்)

நோக்கம் :

- ☸ பாடுவதைக் கேட்டல்.
- ☸ கேட்ட பாடலைப் பாடுதல்

“யார் சொன்னது சரியென்று பார்ப்போமா?” என்று சொல்லி பாடலைப் பாடிக்காட்டுங்கள்.

## பாடலைப் பாடிய பின்

நோக்கம் :

- ☸ ஊக வாசிப்பு

குழந்தைகள் வட்டமிட்ட பெயர்களை வாசிக்கச் சொல்லுங்கள்.

குழந்தைகள் வட்டமிட்டவர்கள் மற்றும் அகிலாவின் பிறந்த நாளுக்கு வந்தவர்களின் பட்டியலைக் கரும்பலகை/சார்ட்டில் எழுதுங்கள்

வாசிப்பு உத்திகள் பயன்படுத்தி வாசியுங்கள்.

## சொற்களை இனம் காண

நோக்கம் :

### எழுத்து / சொல்லட்டைச் செயல்பாடுகள் செய்வதெப்படி?

- ஆசிரியர் சொல்லும் சொல்லின் சொல் அட்டையை எடுத்துக் காட்டுதல்.
- ஆசிரியர் கரும்பலகை/ கெட்டி அட்டையில் எழுதும் சொல் லின் சொல்லட்டையை எடுத் துக்காட்டுதல்.
- ஆசிரியர் கரும்பலகை/ கெட்டி அட்டையில் எழுதும் சொல் வரிசைப்படி சொல்லட் டையை அடுக்குதல்.
- ஆசிரியர் கூறும் குறிப்பு/ விடுகதைகளுக்கு விடையாக வரும் சொல்லின் சொல் அட் டையை எடுத்துக் காட்டுதல்.
- ஒலி எழுப்பும், செய்கை காட்டும் சொற்களின் சொல் அட்டைகளை எடுத்துக்காட் டுதல்.
- பட அட்டைகளையும் சொல் லட்டைகளையும் பொருத் துதல்.
- வினைச்சொல் அட்டைகளை யும் பெயர்ச்சொல் அட்டை களையும் பொருத்தி வாக்கி யம் அமைத்தல்.
- வாக்கிய அட்டைகளை வரி சைப்படுத்திக் கதை கண்டு பிடித்தல்.




- சொற்களை இனம் காணுதல்

கீழ் காணும் சொல்லட்டைகள் தயாரியுங்கள்.

அம்மா - அப்பா - தாத்தா - பாட்டி - அக்கா - அண்ணன் - தம்பி - மாமா - அத்தை - பாப்பா

சொல்லட்டைச் செயல்பாட்டு உத்திகளைப் பயன்படுத்தி குழந்தைகள் மேற்குறிப்பிட்ட சொற்களை இனம் காண வாய்ப்பளியுங்கள்.

## எழுத்துகளை இனம் காண

நோக்கம்:

- எழுத்துகளை இனம் காணுதல்

கீழ் வரும் எழுத்துகள் உள்ள எழுத்தட்டைகள்/ சொல்லட்டைகள் தயாரித்து எழுத்து / சொல்லட்டை உத்திகளைப் பயன்படுத்தி செயல்பாடுகள் செய்யுங்கள்; குழந்தைகள் எழுத்துகளை இனம் காண வாய்ப்பளியுங்கள்.

**அ**

| | | | |
|---|---|---|---|
| **ம்** | **ப்** | **க்** | **த்** |
| **மா** | **பா** | **கா** | **தா** |

**குறிப்பு** : குறிப்பிட்ட செயல்பாடுகளின் வாயிலாகக் குழந்தைகள் எழுத்துகளை / சொற்களை இனம் காண வில்லையெனில் மேலும் பொருத்தமான செயல்பாடுகள் கொடுத்து அவற்றை இனம் காண வாய்ப்பளிக்க வேண்டும்.

## நீ என்ன சொல்லுவாய்?

நோக்கம் :

- தன் கருத்தை வெளியிட வாய்ப்பளித்தல்

அகிலா தனக்குக் கிடைத்த பரிசைப் பற்றிச் சொல்வதை வாசித்துக் காட்டுங்கள். தொடர்ந்து..

“உங்களுக்கு என்னென்ன பரிசுகள் கிடைத்துள்ளன?”

என்று கேட்டு, குழந்தைகள் கூறும் பரிசுப்பொருள்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். பிறகு அப்பரிசைப் பற்றி, “அகிலா கூறியது போல் கூறமுடியுமா?” என்று கேட்டு குழந்தைகள் கூறுவதைக் கரும்பலகையில் எழுதுங்கள். (அவ்வாறு எழுதும் போது உரக்கச் சொல்லிக் கொண்டே எழுத மறந்து விடாதீர்கள்.)

பொருத்தமான வாசிப்பு உத்தியைப் பயன்படுத்திக் குழந்தைகள் ஊக வாசிப்பு வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

### வரையுங்கள் - எழுதுங்கள்

நோக்கம் :

- எழுத்து முன் பயிற்சி

அம்புக்குறிபோகும் போக்கில் வரைய வேண்டும் என்று அறிவுறுத்துங்கள்.

நிறங்கள் கொடுப்பதற்கும் குறிப்புகள் சொல்லுங்கள்.

### கண்டுபிடியுங்கள் - எழுதுங்கள்

நோக்கம் :

- எழுத்துகளை இனம் கண்டுள்ளார்களா என்றறிதல்.
- கற்ற எழுத்தைப் பயன்படுத்திப் புதிய சொல் உருவாக்குதல்.

இச்செயல்பாடுகள் வாயிலாக உங்கள் குழந்தைகள் மேற்குறிப்பிட்ட எழுத்துகளை இனம் கண்டுள்ளார்கள் என்று உறுதியானபின் பாடப்புத்தகத்திலுள்ள செயல்பாடுகளைக் குழந்தைகள் தாமாகச் செய்ய முயற்சிக்கட்டும் . மிகவும் சிரமப்பட்டால் மட்டும் , **அப்பா**-வில் உள்ள **பாப்பா**-வைக் கண்டுபிடிப்பதெப்படி என்றுணர்த்துங்கள். மீதமுள்ளதைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.

### இதிலிருந்தும் அதிலிருந்தும்

நோக்கம்:

- எழுத்துகளை இனம் கண்டுள்ளார்களா என்றறிதல்.
- கற்ற எழுத்தைப் பயன்படுத்தி புதிய சொல் உருவாக்குதல்.

இரண்டு சொற்கள் எழுதி குழந்தைகள் காண வாய்ப்புருவாக்கி,

- முதல் சொல்லில் முதலெழுத்தும் இரண்டாம் சொல்லில் இறுதி எழுத்தும் சேர்ந்தால் வரும் சொல்.
- இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் கொடுத்து இது போல் குறிப்புகள் சொல்லி சொல்லைக் கண்டுபிடித்து எழுத வாய்ப்பளிக்கலாம்.
- விடுகதை சொல்லி அதன் விடை எழுத வாய்ப்பளிக்கலாம்.



**ஆசிரியர் கவனத்திற்கு...**

மொழிக் கற்றலில் இது மிக முக்கியமான கட்டமாகும். எனவே பொறுமையாக குழந்தைகள் உங்களுடனே வந்து கொண்டிருக்கிறார் களா என்று கவனித்துக் கொண்டே செய்ய வேண் டும். எழுத்தின் வரி வடிவில் ஏற்படும் மாற்றம் ஒலிப் பிலும் ஏற்படுகிறது என்ற முக்கியமான அடிப்படை விதியைக் குழந்தைகள் தாமே உருவாக்கிக்கொள்ள வாய்ப்பளிக்கிறோம் என் பதை மனதில் கொண்டு செய்ய வேண்டும்.



பாடப்புத்தகத்தில் பக்கம் 12- ல் புறா ஒன்று ், ி, ா, ஆகிய ஒலித்துணைக் குறியீ டுகளைக் கல்விக் கொண்டு வெளியேறு கிறது. இப்புறா இவ்வொலித் துணைக் குறியீடு களுடன் வேறொரு பாடத்தில் உள்ளே நுழையும். (பார்க்க: அலகு-2 பக்கம்-28) அப்படி உள்ளே நுழையும் இடத்தில் புறா கொண்டு வரும் ஒலித்துணைக் குறியீடு களை அங்கு அறிமுகமான உயிர்மெய் எழுத்துகளுடன் இணைத்து புதிய உயிர் மெய் எழுத்துகளை அறிமுகப் படுத்த வேண்டும்.

## இப்ப எப்படிச் சொல்லணும்?

நோக்கம்:

- ், ா என்ற ஒலித் துணைக் குறியீடுகளை அறிதல்
- ், ா என்ற ஒலித் துணைக் குறியீடுகளை தான் கற்ற பிற உயிர்மெய் எழுத்துகளில் சேர்த்து புதிய உயிர்மெய் எழுத்து உருவாவதைக் கவனித்தல்.
- ஒலிப்பிலும் வரிவடிவத்திலும் ஏற்படும் மாற்றங்களை இனம் காணுதல்.
- அவற்றை ஒலித்தும் எழுதியும் பழகுதல்

இனி நாம் செய்யப்போவது மிகமிக முக்கியமான செயல்பா டாகும். குழந்தைகள் வரிவடிவத்தில் ஏற்படும் மாற்றம் ஒலிப்பிலும் பிரதிபலிக்கும் என்ற கருத்துருவாக்க முயற்சிக்கப் போகிறோம். எனவே மிகப் பொறுமையாக, தெளிவாக இச்செயல்பாட்டைச் செய்ய வேண்டும்.

நான் கரும்பலகையில் எழுதும் எழுத்துகளை யாரால் வாசிக்க முடியும்? என்று கேட்டு, குழந்தைகள் அனை வரும் காணும்படி நிறுத்தி மெதுவாக

ப், ம், த், க், ட்

என முதலில் எழுதுங்கள். தொடர்ந்து

பா, மா, தா, கா

என்று எழுதுங்கள். நீங்கள் எழுத குழந்தைகள் வாசிக் கிறார்களா என்று கவனித்துக் கொண்டே எழுதுங்கள்.

ஒவ்வொரு எழுத்தாகத் தொட்டு நீங்கள் ஒரு முறை வாசி யுங்கள்.

“நன்கு கவனியுங்கள். நான் இதில் ஒரு மாற்றம் செய்யப் போகிறேன்.” என்று சொல்லிக் கொண்டே ப், ம், த், க், ட் என்ற எழுத்துக்களில் உள்ள புள்ளியை அழியுங்கள்.

இப்போது இதை எப்படி வாசிக்க வேண்டும்? குழந்தை கள் பதில் கூற வாய்ப்பில்லையல்லவா?

இதை இப்படிச் சொல்ல வேண்டும் என்று சொல்லி

ப, ம, த, க, ட

என்ற எழுத்துகளை வாசியுங்கள்.

நான் தொடும் எழுத்தைச் சொல்ல முடியுமா? என்று கேட்டு குழந்தைகள் சொல்ல வாய்ப்பளியுங்கள்.

**இரண்டாவது வரிசையில் உள்ள எழுத்திலும் ஒரு மாற்றம் செய்யப் போகிறேன். மாறிய எழுத்தை நீங்களே வாசிக்க வேண்டும் என்று சொல்லி, துணைக் கால்களை அழியுங்கள். குழந்தைகள் சரியாக**

**ப, ம, த, க, ட**

**எனச் சொல்கிறார்களா என்று கவனியுங்கள்.**

## குழுவில் சேராததை வட்டமிடுங்கள்

நோக்கம் :

- தான் கற்றதை வேறொரு சூழலில் பயன்படுத்தும் திறன்

ஆழ்ந்து கவனித்து ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு பிடிக்கும் திறனை வளர்க்க உதவும் செயல்பாடாகும் இது.

இச்செயல்பாட்டைக் குழந்தைகளே செய்ய வாய்ப்பளியுங்கள். தேவை ஏற்பட்டால் மட்டும் உதவுங்கள்.

## இதைச் சொல்ல முடியுமா?

நோக்கம்:

- **டி** என்ற எழுத்தறிதல்
- அதைத் தான் கற்ற பிற எழுத்துகளில் சேர்த்து புதிய சொற்கள் உருவாவதைக் கவனித்தல்.

**நான் எழுதும் எழுத்தை வாசிக்க முடியுமா? என்று கேட்டு 'டி' என்ற எழுத்தைக் கரும்பலகையில் எழுதுங்கள்.**

**அனைவரும் சரியாகச் சொன்னால் பாராட்ட மறந்து விடாதீர்கள்.**

**"இனி நான் எழுதுவதை யார் முதலில் வாசிப்பீர்கள் என்று பார்க்கலாம்" என்று சவால் விட்டு,**

**படி, மடி, தடி, கடி, அடி**

**என்ற சொற்களை நிறுத்தி மெதுவாக எழுதுங்கள். குழந்தைகளே வாசிக்க முயற்சிக்கட்டும்.**

## இப்ப என்ன ஆகுது?

நோக்கம்:

- **ி** என்ற ஒலித் துணைக் குறியீட்டைத் தான் கற்ற பிற உயிர் மெய் எழுத்துகளில் சேர்த்து புதிய உயிர் மெய் எழுத்து உருவாவதைக் கவனித்தல்.

### பாடலைப் பலமுறை பாடுவதெப்படி?

- முதலில் நான் பாடுகிறேன். யாரும் என்னுடன் சேர்ந்து பாட வேண்டாம். கவனித்தால் போதும் என்று கூறி பாடுதல்.
- நான் பாடுகிறேன். நீங் கள் சத்தம் வராமல் மனதிற்குள் பாட வேண்டும் என்று சொல்லி இரண்டாம் முறை பாடுதல்.
- நான் பாடுகிறேன். என்னோடு சேர்ந்து பாடுங்கள் என்று கூறி பாடுதல்.
- எவ்வளவு மெதுவாக/உரக்கப் பாட முடியும் என்று சவால் விட்டுப் பாட வாய்ப்பளித்தல்.
- இருவர் இருவராய் பாட, குழுவாகப் பாட வாய்ப் பளித்தல்.
- ஆளுக்கொரு வரி என தொடர்முறையில் பாட வாய்ப்பளித்தல்.
- குறிப்பிட்ட சொற்களை இனம் காணப் பாடுதல்.
- குறிப்பிட்ட சொல் எத்தனை முறை வந்துள்ளது எனக் கண்டுபிடிக்கப் பாடுதல்.

- ஒலிப்பிலும் வரிவடிவத்திலும் ஏற்படும் மாற்றங்களை இனம் காணுதல்.
- அவற்றை ஒலித்தும் எழுதியும் பழகுதல்

**கரும்பலகையில் ப, ம, த, க என்ற எழுத்துகளை எழுதுங்கள். குழந்தைகளை வாசிக்கச் சொல்லுங்கள். அடுத்த வரியில் 'டி' என்ற எழுத்தை எழுதுங்கள். குழந்தைகள் வாசிக்கட்டும்.**

**"நன்கு கவனியுங்கள். நான் இங்குள்ள எழுத்தில் ஒரு மாற்றம் செய்யப் போகிறேன். மாற்றம் அடைந்த எழுத்தை யார் முதலில் வாசிக்கிறீர்கள் என்று பார்க்கலாம்" என்று சொல்லி, 'ப' வின் மேல் ('ி')சுழியுங்கள். குழந்தைகள் அனைவரும் நீங்கள் எழுதுவதைக் கவனிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு 'பி' என்று மாற்றுங்கள். குழந்தைகள் சொல்கிறார்களா? இல்லையெனில் மீண்டும்**

**'ட' என்று எழுதுங்கள். இதுவென்னவென்று கேளுங்கள். பிறகு 'ி' சுழியைச் சேருங்கள். 'டி' என்று சொல்கிறார்களா?**

**அப்படியானால் 'ப' எழுதி இதுவென்னவென்று கேளுங்கள். பிறகு மேலே 'ி' என்று சுழித்து இதுவென்னவென்று கேளுங்கள். குழந்தைகள் 'பி' என்று சொல்கிறார்களா? (ஒருவரும் சொல்லவில்லையெனில் நீங்களே வாசித்துக் காட்டுங்கள்)**

**பிறகு ம, த, க ஆகிய எழுத்துகளை ஒவ்வொன்றாக எழுதி வாசிக்கச் சொல்லி மேலே சுழித்து மி, தி, கி என்று வாசிக்க வாய்ப்பளியுங்கள்.**

இந்த அலகில் மூன்று நிகழ்வுகள் உள்ளன. ஒவ்வொரு நிகழ்வும் முடிவடையும் பொழுதும் கீழ் காணும் வினாக்களைக் கேளுங்கள். குழந்தைகள் கூறும் பதில்களைச் சார்ட்டில் எழுதுங்கள். மூன்று நிகழ்வுகளுக்கு மூன்று சார்ட்டுகள் உருவாகும் அல்லவா? இவையே இவ்வலகிற்கான **உருவாகும் கதைப்புத்தகம்** (Evolving Text)

## சொல் வழியே

நோக்கம்:

- இதுவரைக் கற்ற சொற்களைக் குழந்தைகள் இனம் கண்டுள்ளார்களா என்றறிதல்.
- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்

நான் சொல்லும் சொல் வழியே கோடு வரைய வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் வரையும் கோடு முன்னர் வரைந்த கோட்டில் எங்கும் வெட்டக் கூடாது. அப்படி வெட்டினால் அவர் அவுட். அப்படி வெட்டாமல் கோடு வரைபவர் யாரோ அவரே வெற்றி பெற்றவர் என்று சொல்லி சவால் விட்டுப் போட்டியை நடத்துங்கள்.



## வகைப்படுத்தலாம்

நோக்கம்:

- குடும்ப உறுப்பினர்களைப் பட்டியலிடுதல்
- வகைப்படுத்துதல்

உங்கள் வீட்டில் நடந்த விழாவிற்கு யார் யார் வந்தார்கள்? என்றுக் கேட்டு குழந்தைகள் கூறும் உறவுப் பெயர்களைக் கரும்பலகை/ சார்ட்டில் எழுதுங்கள். கீழே உள்ளது போல் கரும்பலகை/ சார்ட்டில் கட்டம் வரையுங்கள். தொடர்ந்து

- உங்கள் வீட்டில் யார் யார் வசிக்கிறார்கள்?
- வேறு வீட்டில்/ ஊரில் யார் யார் வசிக்கிறார்கள்?

என்று கேட்டு குழந்தைகள் கூறுவது போல் அட்டவணையை முழுமையாக்குங்கள்.

| என் வீட்டில் இருப்பவர்கள் | வேறு வீட்டில் இருப்பவர்கள் |
|---|---|
| | |
| | |

**உருவாகும் கதைப் புத்தகம் (Evolving Text)**

ஆரம்பக் கட்டத்தில் பாடப் பகுதியிலுள்ள வாசிப்புப் பகுதியை குழந்தைகள் தாமா கவே வாசிக்க இயலாது. எழுத்தறியா இந்நிலையில் குழந்தைகள் ஊக வாசிப்பு நடத்த வாய்ப்பு அளிக்க வேண்டும். அதற்கான வாய்ப் பாக உருவாகும் கதைப் புத்தகம் ( Evolving Text) அமைகிறது. பாடக் கருத் தோடு தொடர்புடைய கற்றல் அனுபவங்கள் நல்கும் போது இக்கருத்தை மனதில் கொண்டு பொருத்தமான வினாக்கள் கேட்டு, அவ்வினாக்களுக் குக் குழந்தைகள் கூறும் பதில் களை அவர் சொல்வது போல், அவர்கள் பார்க்கும் வண்ணம் சார்ட்டில் எழுத வேண்டும். இவ்வாறு கற்றல் செயல்முறைகளின் பல கட் டங்களில் உருவாக்கும் கதைப்புத்தகங்களைக் குழந் தைகள் ஆசிரியர் உதவி யுடனும் தாமாகவும் வாசிக்க வேண்டியவை.

1. யாருடைய பிறந்த நாள்?
2. பிறந்த நாளில் பங்குபெற்றவர்கள் யார் யார்?
3. அப்பா தந்த பரிசு என்ன?
4. அவளுக்குப் பிடித்த பரிசு எது?

**சார்ட் 1**

அகிலாவின் பிறந்தநாள்.

அப்பா, அம்மா, அக்கா, அண்ணன், தாத்தா, பாட்டி, தம்பி, மாமா, அத்தை பங்கு பெற்றார்கள்.

பேசும் பொம்மை பரிசாகக் கிடைத்தது.

பேசும் பொம்மை ரொம்பப் பிடித்தது.

நிகழ்வு - 2

# பொம்மை அலறியது

### வாசிப்பு உத்திகள்

- என்னென்ன சொற்கள் எழுதியுள்ளோம் என்றறிய ஒரு முறை வாசிக்கலாம்.
- எத்தனை சொற்கள் எழுதியுள்ளோம் என்றறிய இரண்டாம் முறை வாசிக்கலாம்
- குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் அல்லது முடியும் சொற்களைக் கண்டு பிடிக்க
- அதிக எழுத்துகள்/ மிகக் குறைவான எழுத்துகள் உள்ள சொல்லைக் கண்டுபிடிக்க
- நான் ஒலியெழுப்பாது கூறும் சொல்லை என் நாவசைவைப் பார்த்துக் கண்டுபிடித்து வாசிக்க முடியுமா?
- நான் காற்றில் எழுதும் சொல்லைக் கண்டுபிடித்து வாசிக்க முடியுமா?
- நான் காட்டும் சொல் அட்டையில் உள்ள சொல்லைக் கண்டுபிடித்து வாசிக்க முடியுமா?
- நான் கூறும் சொல்லைக் கண்டுபிடித்த வாசிக்க முடி யுமா?
- நான் காட்டும் படத்திற்கேற்ற சொல்லை வாசிக்க முடியுமா?
- நான் நடிப்பது என்ன வென்று சொல்ல முடியுமா?

### கதையோட்டம்

நோக்கம் :

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த.
- பாடப்பகுதிக்குள் ஆர்வத்துடன் நுழைய ஆயத்தப் படுத்துதல்.

பிறந்த நாள் விருந்து முடிந்தது. அகிலாவும் நண்பர்களும் வெளியே புறப்பட்டார்கள். ‘‘எங்கே போறீங்க? நானும் வருகிறேன்’’ என்று சொல்லி பேசும் பொம்மையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. அனைவரும் தோப்பை அடைந்தனர்.

“என்ன விளையாட்டு விளையாடலாம்?” நண்பர்கள் கேட்டனர்.

“...................... விளையாடலாம்” என்று பேசும் பொம்மை சொன்னது. அனவரும் விளையாடத் தொடங்கினர். நாய், தக்க நேரம் பார்த்துக் கோபத்தோடு காத்திருந்தது. நாய்க்கு வாய்ப்புக் கிடைத்தது. அதைப் பயன்படுத்தி பொம்மையைப் பழி வாங்கியது.

என்று கதையோட்டத்தைக் கூறி நிறுத்திக் கீழ்க்காணும் வினாக்களைக் கேளுங்கள்.

- என்ன விளையாட்டு விளையாடியிருப்பார்கள்?
- நாய் பொம்மையை என்ன செய்திருக்கும்?

குழந்தைகள் கூறும் விளையாட்டுக்களை, பொம்மையை என்ன செய்திருக்கும் என்பதற்கான பதிலையும் கரும்பலகையில் எழுதுங்கள்.

### கலந்துரையாடல்

நோக்கம்:

- படவாசிப்பு

என்ன நடந்தது என்று பார்ப்போமா? என்று கேட்டுக் குழந்தைகளைப் பாடப் புத்தகத்திலுள்ள படத்தைப் பார்க்கத் தூண்டுங்கள். கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?

- என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள்?
- யார் யார் எங்கெங்கு ஒளிந்திருக்கிறார்கள்?
- நாய் எங்கிருக்கிறது?
- அகிலாவுடன் வந்த பேசும் பொம்மை எங்கிருக்கிறது?

## பொம்மை அலறியது

நோக்கம்:

- வாசிப்பதைக் கேட்டுப் புரிந்துகொள்ள வாய்ப்பளித்தல்

“உண்மையில் என்ன நடந்தது தெரியுமா?” என்று கேட்டுப் பாடப் பகுதியை ஒரு முறை வாசியுங்கள்.

(குழந்தைகள் இப்பகுதியை எப்படி வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அவ்வாறு வாசியுங்கள்.)

## கலந்துரையாடல்

நோக்கம்:

- வாசித்ததைக் கேட்டுப் புரிந்துள்ளார்களா என்றறிய

பாடப்பகுதியை வாசித்ததும் பாடப்புத்தகத்தில் கலந்துரையாடலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## கதையோட்டம்

“குழந்தைகளின் அலறல் சத்தம் கேட்டு தோட்டக்காரர் ஓடி வந்தார். தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் சொன்னார். அங்கிருந்து தீயணைப்பு வீரர் ஒருவர் வந்தார். பொம்மையைக் காப்பாற்றினார். பொம்மையைக் காப்பாற்ற அவர் போன வழி பாடப்புத்தகத்தில் உள்ளது”

என்று கூறி குழந்தைகள் பாடப்புத்தகத்தைப் பார்க்கத் தூண்டுங்கள்.

## பேசும் பொம்மையைக் காப்பாற்றுங்கள்

நோக்கம்:

- எழுத்து முன் பயிற்சி

- படத்தைக் கரும்பலகையில் / சார்ட்டில் பெரிதாக வரைந்து கொள்ளுங்கள்.

**நிகழ்வு 2**

**படவாசிப்பு (கணிதம்)**

பக்கம் 13

கிணற்றிற்கு வெளியே நிற்பது யார்?

கிணற்றிற்கு உள்ளே என்ன இருக்கும்?

மரத்திற்கு பின்னால் ஒளிந்திருப்பது யார்?

செடிக்குப் பின்னால் ஒளிந்திருப்பது யார்?



- நுழைவாயிலில் இருக்கும் தீயணைப்பு வீரரிடமிருந்து தொடங்கி பொம்மை வரை வரையுங்கள்.
- நீங்கள் வரைவது போல் குழந்தைகளும் தங்கள் பாடப் புத்தகத்தில் வரையட்டும்.



## பொம்மை அலறியது

நோக்கம்:

- சொற்களை இனம் காணுதல்

“பொம்மை அலறியதை மீண்டும் வாசிக்கப் போகிறேன். நான் வாசித்து முடித்ததும் உங்களுக்குத் தெரிந்த எத்தனை சொற்கள் இப்பகுதியில் உள்ளன என்று நீங்கள் சொல்ல வேண்டும்” என்று சொல்லிப் பாடப்பகுதியை இரண்டாம் முறை வாசியுங்கள். வாசித்து முடித்த பின்,

- தங்களுக்குத் தெரிந்த சொற்கள் என்று குழந்தைகள் கூறும் சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- அச்சொற்களைப் பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி ஓரிரு முறை வாசியுங்கள்.
- பிறகு ஒவ்வொரு சொல்லாக வாசித்து, அச்சொல் அவர்களது பாடப்புத்தகத்தில் எங்குள்ளது என்று கண்டுபிடிக்க வாய்ப்பளியுங்கள்.
- நான் சுட்டிக் காட்டும் சொல்லை வட்டமிட வேண்டும் என்று சொல்லி ஒவ்வொரு சொல்லாக வாசியுங்கள்.
- குழந்தைகள் அச்சொல்லைத் தங்களது பாடப்புத்தகத்தில் வட்டமிடட்டும்.



## விளையாடுவோம் - 1

நோக்கம்:

- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்.
- சொற்களை இனம் காணுதல்

## தேவையான சொல்லட்டைகள்

- இச் சொல்லட்டைகளைத் தயாரியுங்கள்.
- பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி இச்செயல் பாட்டைச் செய்யுங்கள்

## விளையாடுவோம் - 2

நோக்கம்:

- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்.

☸ எழுத்துகளை இனம் காணுதல்

## தேவையான எழுத்தட்டைகள்

- இவ்வெழுத்தட்டைகளைத் தயாரியுங்கள்.
- பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி இச்செயல் பாட்டைச் செய்யுங்கள்.



## அகிலாவின் குடும்ப மரம்

நோக்கம்:

☸ கற்ற சொற்களை வேறொரு சூழலில் எழுதுதல்

“அகிலாவின் வீட்டில் யார் யார் இருந்தார்கள்?”

என்று கேட்டுக் குழந்தைகள் கூறுவதைக் கரும்பலகையில் எழுதுங்கள்; குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள். குழந்தைகளே தங்கள் பாடப்புத்தகத்திலுள்ள அகிலாவின் குடும்ப மரத்தில் எழுதத் தூண்டுங்கள்.

## யாருக்கு என்ன வேலை?

நோக்கம்:

☸ குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீட்டு வேலை களைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்றறிதல்.

☸ உறவுப் பெயர்களை எழுதுதல்.

கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் கூறும் கருத்துகளைக் கரும்பலகையில் பட்டிய லிடுங்கள்.



- உங்கள் வீட்டில் அப்பா என்னென்ன வேலைகள் செய்கிறார்?
- உங்கள் வீட்டில் அம்மா என்னென்ன வேலைகள் செய்கிறார்?
- உங்கள் வீட்டில் அக்கா என்னென்ன வேலைகள் செய்கிறார்?
- 
- 

குழந்தைகள் கூறும் அனைத்துக் குடும்ப வேலைகளையும் உட்படுத்துங்கள்.

தொடர்ந்து,

பாடப்புத்தகத்தில் பக்கம் 15- ல் உள்ள அட்டவணையைக் குழந்தைகளே பூர்த்தி செய்யத் தூண்டுங்கள்.




## அதிகமான வேலை செய்வது யார்?

நோக்கம் :

☸ அலசி ஆராய்ந்து பொது முடிவிற்கு வருதல்.

தாங்கள் பூர்த்தி செய்த அட்டவணையை ஆராய்ந்து தங்கள் முடிவுகளைக் கூறுகிறார்களா என்று கவனியுங்கள்.

குழந்தைகளின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதி அவர்கள் கூறும் 'முடிவு' களையும் எழுதுங்கள். அதன் அடிப்படையில் குழந்தைகளின் பங்களிப்புடன் வகுப்பிற்கான பொது முடிவிற்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்.




## கலந்துரையாடல்

நோக்கம் :

☸ தானும் வீட்டு வேலை செய்ய வேண்டும் என்ற உளப்பாங்கு உருவாதல்.

- ♦ நீ என்னென்ன வேலைகள் செய்வாய்?
- ♦ இனியும் என்னென்ன வேலைகள் செய்ய முடியும்?

என்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## உருவாகும் கதைப்புத்தகம்




1. யாருக்கு பொம்மை மீது கோபம்?
2. நாய் பொம்மையை என்ன செய்தது?
3. பொம்மையைக் காப்பாற்றியது யார்?

நிகழ்வு - 3

# அகிலாவின் வீடு (கணிதம்)

## கதையோட்டம்

நோக்கம்:

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த.
- பாடப்பகுதிக்குள் ஆர்வத்துடன் நுழைய ஆயத்தப்படுத்துதல்.

அகிலாவின் பிறந்தநாளுக்குத் தோழி பாலாவும் மாலாவும் தாமதமாக வந்தார்கள். "அகிலா.. அகிலா.." வீட்டு வாசலில் நின்று மாலா அழைத்தாள். அகிலாவின் அம்மா வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தாள். "அகிலா எங்கம்மா?" பாலா கேட்டாள். "அவளும் நண்பர்களும் தோப்பிற்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வரும் நேரமாச்சு. நீங்க வீட்டிற்குள் வந்து உட்காருங்க" அம்மா சொன்னாள். "அவர்கள் வரும் வரை நாங்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" இருவரும் சொன்னார்கள். வீட்டைச் சுற்றிப் பார்த்தனர்.

- அவர்கள் என்னென்ன பார்த்திருப்பார்கள்?

என்று கேட்டு நிறுத்திக் குழந்தைகள் பதில் கூற வாய்ப்பு அளியுங்கள்.

## படத்தில் யார் யார்?

நோக்கம்:

- பட வாசிப்பு

"என்னென்ன பார்த்தார்கள் தெரியுமா? உங்கள் கணிதப் பாட நூலை எடுங்கள். பக்கம் 6 ஐப் பாருங்கள் "

என்று சொல்லிப் படத்தைப் பார்க்க வாய்ப்பளியுங்கள். தொடர்ந்து கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- இது யாருடைய வீடு?
- வீட்டின் முன் யார் யார் இருக்கிறார்கள்?
- வேறு என்னென்ன இருக்கிறது?
- 
- 
- 

**நிகழ்வு 3**

**படவாசிப்பு (கணிதம்)**

பக்கம் 16, 17

தூணிற்கு அருகில் அமர்ந்திருப்பது யார்?

நாய்க்கு முன்னால் ஓடுவது யார்?

பொம்மைக்கு பின் னால் யார்?

பொம்மை எங்கு ஒளிந் துள்ளது?

ஆட்டோவிற்கு உள்ளே இருப்பது யார்?

ஆட்டோவிற்கு வெளியே யார் யார் இருக்கிறார்கள்?

மேசை போல் இருப்பது என்ன?

**தொப்பிக்காரன் கதை**

நோக்கம்:

☸ மேலே/கீழே, உயரமானது / குட்டையானது போன்ற கணிதக்கருத்துருவாதல்

கீழ்க்காணும் கதையைச் சுவைபடச் சொல்லுங்கள்

ஒரு ஊரில் ஒரு தொப்பிக்காரன் இருந்தான். அவன் **குட்டையானவன்.** அவனால் வேறு வேலைக்குப் செல்லமுடியாததால் தொப்பிவிற்று பிழைத்து வந்தான். ஒரு நாள் வழக்கம் போல் தன் தொப்பிக் கூடையைத் தூக்கிக் கொண்டு சந்தைக்குப் போனான். நடந்து... நடந்து தளர்ந்து போனான். வழியில் ஒரு **உயரமான** மரத்தைப் பார்த்தான். தன் தொப்பிக் கூடையைக் **கீழே** வைத்தான். கூடைக்**குள்ளே**யிருந்த ஒரு தொப்பியை தன் தலையில் வைத்துக் கொண்டான். மரத்தடியில் அமர்ந்திருந்த தொப்பிக்காரன் அப்படியே உறங்கிப் போனான். "ஹீ..ஹீ" சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான். கூடைக்குள்ளே பார்த்தான். **உள்ளே** ஒரு தொப்பியும் இல்லை. "ஹீ..ஹீ" மீண்டும் சத்தம். **மேலே** பார்த்தான். "ஹீ..ஹீ" மரத்திலிருந்து குரங்குகள்

## எது?

நோக்கம்:

☸ பட வாசிப்பு

☸ பெரியது / சிறியது, கூடுதல் / குறைவு, உள்ளே / வெளியே, உயரமானது / குட்டையானது, மேலே / கீழே போன்ற கணிதக் கருத்துருவாதல்.

கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் படங்களை வாசித்துப் பதில் கூற வாய்ப்பு அளியுங்கள்.

- மரத்தில் இருக்கும் பலாப்பழங்களில் பெரியது எது? சிறியது எது?
- எந்த மரத்தில் கூடுதல் பழங்கள் உள்ளன?
- எந்த மரத்தில் குறைவான பழங்கள் உள்ளன?
- வீட்டிற்கு வெளியே யார் யார் இருக்கிறார்கள்?
- வீட்டிற்கு உள்ளே யார் யார் இருப்பார்கள்?
- உயரமான தென்னை எது?
- குட்டையான தென்னை எது?
- மரத்திற்கு மேலே பறப்பது எது?

## பெரியது / சிறியது

நோக்கம்:

☸ பெரியது / சிறியது என்ற கருத்துருவாதல்.

மாலாவும் பாலாவும் வீட்டைச் சுற்றி வந்தபின் அகிலாவின் அம்மா அவர்களுக்குத் தம்ளரில் தண்ணீர் கொடுத்தார்கள்.

கலந்துரையாடல்

"மாலாவும் பாலாவும் வீட்டைச் சுற்றி வந்தபின் அகிலாவின் அம்மா அவர்களுக்குத் தம்ளரில் தண்ணீர் கொடுத்தார்கள்" என்று கூறிய பின் கீழ்க் காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- நம் வகுப்பிலுள்ள அனைவரும் தண்ணீர் குடிக்க வேண்டுமெனில் எந்தப் பாத்திரத்தில் தண்ணீர் எடுக்க வேண்டும்?
- சிறிய பாத்திரத்திரத்தில் ஏன் தண்ணீர் எடுக்கக் கூடாது?

மேலும்,

- பள்ளியில் உள்ள தண்ணீர் தொட்டியில் தண்ணீர் நிரப்புவதற்குப் பதில் தண்ணீர் குப்பியில் நிறைந்து வைத்தால் போதுமா?
- கிரிக்கெட் பந்திற்குப் பதில் கால்பந்தைப் பயன்படுத்தலாமா?
- கோலி விளையாட்டில் கோலிக் குண்டிற்குப் பதில் கால் பந்தைப் பயன்படுத்தலாமா?
-
-
-

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## பெரியது எது? சிறியது எது?

நோக்கம்:

- இரண்டு பொருட்களை ஒப்பிட்டு பெரியது எது சிறியது எது என்று கண்டுபிடித்தல்.

- பல அளவில் உள்ள புத்தகங்கள், பந்துகள்... போன்ற பல் வேறு பொருட்களைக் காட்டுங்கள்.
- அவற்றை ஒப்பிட்டு பெரியது எது சிறியது எது என்று குழந்தைகளே கண்டுபிடித்துக் கூற வாய்ப்பளியுங்கள்.

## உள்ளேயிருப்பது என்ன?

நோக்கம்:

- உள்ளே என்ற கருத்துருவாதல்

- ஒரு பெட்டிக்குள் மிட்டாய்/கல் போடுங்கள்.
- பெட்டிக்குள் பார்க்காமல் பெட்டியைக் குலுக்குப் பார்த்து உள்ளேயிருப்பது என்னவென்று குழந்தைகள் கூற வாய்ப்பளியுங்கள்.

## முதலில் யார்?

நோக்கம்:

- முதலில் என்ற கருத்துருவாதல்

- வகுப்பின் ஒரு மூலையில் ஐந்தாறு தீப்பெட்டிகளும் அதில் இட்டு நிறைக்கத் தேவையான புளிய விதைகள்/ பயறுகள்/ கற்கள் போன்றவற்றையும் வையுங்கள்.

சிரித்தன. அவற்றின் தலையில் தொப்பி. என்ன செய்வது? அவனுக்கு அழுகை வந்தது. குரங்குகளும் அவன் அழுவதைப் பார்த்து அழுதன. கோபம் கொண்டு முறைத்தான். குரங்குகளும் முறைத்தன. தொப்பிக்காரன் கோபம் தாங்காமல் தன் தலையிலிருந்த தொப்பியை எடுத்து **மேலே** எறிந்தான். குரங்களும் தங்களிடமிருந்த தொப்பிகளை தொப்பிக்காரனைப் பார்த்துக் **கீழே** எறிந்தன. **கீழே** விழுந்த தொப்பிகளைப் பொறுக்கிக் **கூடைக்குள்** இட்டான். கூடையை தலை மேல் தூக்கி வைத்தான். தொப்பிக்காரன் ஓடியே போனான்.

- ஐந்தாறு குழந்தைகளைத் தேர்ந்தெடுங்கள்.
- "நான் 1,2,3 என்று சொன்ன உடன் நீங்கள் ஓடிச் சென்று அத்தீப்பெட்டிகளில் புளிய விதைகள்/ பயறுகள்/ கற்கள் நிறைக்க வேண்டும். நிறைத்து முடிந்ததும் நான் நிறைச்சிட்டேன் என்று குரல் கொடுக்கணும்" என்று அறிவுறுத்தி விளையாட வாய்ப்பளியுங்கள்.
- முதலில் நிறைத்தது யார் என்று குழந்தைகளே கூறட்டும்.

குழந்தைகள் நிறைத்ததை வேறு சில குழந்தைகள் ஓடிச் சென்று வெளியில் கொட்டி யார் முதலில் கொட்டியது என்று கூறவும் வாய்ப்பளியுங்கள்.

**சிறந்த முறையில் கதை சொல்ல**

நாம் கதை சொல்லுவதின் மூலம் குழந்தைகளின் முன் சொற்களால் ஓர் அழகான காட்சி கொண்டு வருகிறோம். அதற்கேற்ற முறையில் நாம் கதை சொல்ல வேண்டும்

- சரியான குரல் ஏற்றத்தாழ்வு
- பொருத்தமான சைகைகள்
- பொருத்தமான முகபாவம்
- இடையிடையே கதையை நிறுத்திக் கேள்விகள் கேட்டுக் குழந்தைகளையும் கதையில் பங்கெடுக்கச் செய்தல்
- விலங்குகளின் ஒலியெழுப்புதல்
- பல குரலில் பேசுதல்

## உள்ளே வெளியே

நோக்கம்:

☸ உள்ளே வெளியே என்ற கருத்துருவாதல்

- குளம்/ கரை விளையாட்டைக் குளம் - கரை என்று சொல்லுவதற்குப் பதில் உள்ளே வெளியே என்று சொல்லி விளையாடுங்கள்.

அதைத் தொடர்ந்து உள்ளே யார் யார் நிற்கிறார்கள் வெளியே யார் யார் நிற்கிறார்கள் என்று கூற குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள்.

இது போல் உள்ளே வெளியே என்று கூற வாய்ப்புள்ள வேறு சூழல்களையும் உருவாக்கிக் கொடுத்து குழந்தைகள் இக்கருத்தைக் கூற வாய்ப்பளியுங்கள்.

பெரிய பந்தை பெட்டிக்குள்ளே வையுங்கள்.

பைக்குள்ளே உள்ள சின்ன பந்தை வெளியே எடுங்கள்... போன்ற கட்டளைகள் இட்டு குழந்தைகள் உள்ளே வெளியே என்ற கருத்தைப் புரிந்துள்ளார்களா என்று மதிப்பிடுங்கள்.

## மேலே - கீழே

நோக்கம்:

☸ மேலே - கீழே என்ற கருத்துருவாதல்.

- கீழ்க்காணும் விளையாட்டுகள் விளையாட வாய்ப்பளித்து மேலே - கீழே என்ற கருத்துருவாக்கலாம்.
- கரும்பலகையில் ஒரு கோடு வரைந்து, கோட்டிற்கு மேலே - கோட்டிற்குக் கீழே படம் வரையுங்கள் என்று அறிவுறுத்தி வாய்ப்பளிக்கலாம்.

- கைகளை மேலே உயர்த்துங்கள். கீழே போடுங்கள் என்று கட்டளையிட்டு செயல்பட வாய்ப்பளிக்கலாம்.

இது போல் இக்கருத்தை உணர்த்தும் வேறு பல செயல் பாடுகளும் நல்கலாம்.

### கூடுதல் - குறைவு

நோக்கம்:

❁ கூடுதல் - குறைவு என்ற கருத்துருவாதல்

- இரண்டு குழுக்களாக வைக்கப்பட்டுள்ள பொருட்களின் கூட்டத்தில் எந்தக் கூட்டத்தில் கூடுதல் எதில் குறைவு என்று கண்டுபிடித்துக் கூற வாய்ப்பளியுங்கள்.
- குழந்தைகளை வரிசையாக நிறுத்துங்கள். ஒரு குழந்தையின் பெயர் சொல்லுங்கள்.



அப்பெயருள்ள குழந்தை, எனக்கு முன்னால் ......................., எனக்குப் பின்னால் ......................... என்று சொல்ல வாய்ப்பளியுங்கள்.

- வகுப்பில் நடைப்போட்டி நடத்துங்கள். ஒரு குழந்தை நேரடி வர்ணனை செய்ய வாய்ப்பளியுங்கள்.
- குழந்தைகளை வட்டமாக நிறுத்துங்கள். நீங்கள் குறிப் பிடும் குழந்தை தனக்கு வலது புறம் உள்ளது யார், இடது புறத்தில் உள்ளது யார் என்று கூற வாய்ப்பளி யுங்கள்.
- உங்களுக்கு அருகில் இருப்பவரோடு வலது கைகுலுக் குங்கள். இடது கை குலுக்குங்கள் என்று சொல்லி கை குலுக்க வாய்ப்பளியுங்கள்.
- தொடர்ந்து பாடப்புத்தகம் பக்கம் 10,11,12 ஆகிய பக்கங் களில் உள்ள செயல்பாடுகளை குழந்தைகள் செய்ய வாய்ப்பளியுங்கள்.

### வண்டி விளையாட்டு

தோளைப் பிடித்துக்கொண்டு நான்கு / ஆறு குழந்தைகள் உள்ள வண்டி அமையுங்கள். நீங்கள் சொல்லும் குறிப்புகளுக்கேற்ப அவ்வண்டிகள் இயங்க வேண்டும். அதற்கான சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- முதல் வண்டி வலது புறம் திரும்பட்டும்
- இரண்டாண் வண்டி இடது புறம் திரும்பட்டும்.
- முதல் வண்டியில் ......................... பெரிய பந்துடன் ஏறட்டும்.

- இரண்டாம் வண்டி கீழே கிடக்கும் குச்சி.யின் மேலே றிச் செல்லட்டும்.
- முதல் வண்டியில் ஏற ஆசையுள்ளவர்கள் தங்கள் வலது கையை உயர்த்துங்கள்.
- இரண்டாம் வண்டி தூரத்தில் உள்ள.................. வரைப் போகட்டும்
- முதல் வண்டியில் இதுவரை முன்னால் சென்ற........................ பின்னால் செல்லட்டும்.

பால் பால் பால்
பால் குடிக்கும்
பாப்பா வாயில்
பல் பல் பல்

தாடி தாடி தாடி
தாடி வைத்த
தாத்தா கையில்
தடி தடி தடி

பட்டு பட்டு பட்டு
பட்டு வந்து
பாடுவாள் ஒரு
பாட்டு பாட்டு பாட்டு

பாடம் பாடம் பாடம்
பாடம் படிக்கும்
பாப்பா கையில்
படம் படம் படம்

**சுற்றிலும்...**

நோக்கம் :

- தன்னைச் சுற்றியுள்ள கணிதக் கருத்துகளை இனம் காணுதல்.

“சுற்றிலும் பாருங்கள். நான் கேட்பதற்குப் பதில் கூறுங்கள்” என்று சொல்லி,

**“பெரியது பெரியது எது இங்கே பெரியது?**
**சிறியது சிறியது எது இங்கே சிறியது?”**

என்று இராகத்தோடு கேளுங்கள்.

**‘‘பெரியது பெரியது............ (போர்டு) இங்கே பெரியது?**

**சிறியது சிறியது ............... (சிலேட்டு) இங்கே சிறியது?’’**

என்று இராகத்தோடு பதில் பாட்டுப் பாடட்டும்.

பொருத்தமான சூழலை உருவாக்கிக் கூடுதல் / குறைவு, மேலே / கீழே, உள்ளே / வெளியே... போன்ற கணிதக் கருத்துகளையும் கூற (பாட) வாய்ப்பளியுங்கள்.

## பாடப்புத்தகச் செயல்பாடுகள்

நோக்கம்:

- தாமாகப் பார்த்துணர்தல்
- செயல்பாடுகளில் உள்ள உரையாடலை வாசித்துக் காட்டுங்கள்.
- தொடர்ந்து வரும் வினாவைக் கேளுங்கள்.

- குழந்தைகள் சரியானதில் அடையாளம் இட அறிவுறுத்துங்கள்.

### வீட்டுச் செயல்பாடுகள்

நோக்கம்:

- குழந்தை தான் கற்ற கணிதக் கருத்தை சுதந்திரமாக வெளியிடுதல்.
- பெற்றோர் தன் குழந்தையின் கற்றலில் பங்கேற்றல்.

**வட்டமிடுங்கள், வண்ணம் தீட்டுங்கள்** ஆகிய செயல்பாடு களைக் குழந்தைகள் வீட்டுச் செயல்பாடாகச் செய்து வர அறிவுறுத்துங்கள். அதற்குத் தேவையான குறிப்புகளைக் கூறுங்கள்.

பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்
தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
யாரும் வந்து பார்க்கலாம்
பொம்மை வாங்கிப் போகலாம்

## நிகழ்வு - 4

# பொம்மையைத் தேடி

### கதையோட்டம்

நோக்கம்:

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த
- பாடப்பகுதிக்குள் ஆர்வத்துடன் நுழைய ஆயத்தப் படுத்துதல்

வீட்டிற்குத் திரும்பினாள் அகிலா. தோழிகள் இருவரும் அகிலாவின் பேசும் பொம்மையைப் பார்த்து ஆச்சரியப் பட்டனர். அந்த ஒரு நாளிலேயே பேசும் பொம்மையும் அகிலாவும் நல்ல நண்பர்களாகிவிட்டனர். மறுநாள் அகிலா பள்ளிக்குச் சென்றுவிட்டாள். அகிலா இல்லாமல் கஷ்டப்பட்ட பொம்மையோ அகிலாவின் வரவை எதிர்பார்த்து முன் பக்கத் திண்ணையில் காத்திருந்தது. கோபத்தோடு இருந்த நாய், பேசும் பொம்மை தனியாக இருப்பதைப் பார்த்தது.

“பிறகு என்ன நடந்தது தெரியுமா?” என்று கேட்டு **பொம்மையைத் தேடி** படக் கதையைப் பார்க்கத் தூண்டுங்கள்.

என்ன ஒடு?
நண்டோடு
என்ன நண்டு?
பால் நண்டு
என்ன பால்?
கள்ளிப் பால்
என்ன கள்ளி?
சதுரக் கள்ளி
என்ன சதுரம்?
நாய்ச்சதுரம்
என்ன நாய்?
வேட்டை நாய்
என்ன வேட்டை?
பன்றி வேட்டை
என்ன பன்றி?
ஊர்ப் பன்றி
என்ன ஊர்?
கீரனூர்
என்ன கீரை?
அரைக்கீரை
என்ன அரை?
பொன்னரை
என்ன பொன்னு?
காக்காப் பொன்னு
என்ன காக்கா?
அண்டங்காக்காய்
என்ன அண்டம்?
சோற்றண்டம்
என்ன சோறு?
பழஞ்சோறு
என்ன பழம்?
வாழைப்பழம்
என்ன வாழை?
கருவாழை
என்ன கரு?
நத்தைக் கரு
என்ன நத்தை?
குளத்து நத்தை
என்ன குளம்?
பெரிய குளம்.

## பொம்மையைத் தேடி

நோக்கம் :

☸ படங்களை வாசித்துக் கதை சொல்லுதல்.

"பிறகு என்ன நடந்தது தெரியுமா?" என்று கேட்டு பொம்மை யைத் தேடி படக் கதையைப் பார்க்கத் தூண்டுங்கள்.

முதலில் படங்களைப் பார்த்துக் குழந்தைகளே கதை கூற வாய்ப்பளியுங்கள். ஓரிரு குழந்தைகள் கூறிய பின்,

### படம் - 1

- பொம்மை எங்கு அமர்ந்திருக்கிறது?
- ஏன் அமர்ந்திருக்கிறது?
- செடி மறைவில் ஒளிந்திருப்பது யார்?
- ஏன் அப்படி ஒளிந்திருக்கிறது?
- 
- 

போன்ற வினாக்களைக் கேட்டு,

- "பொம்மை அகிலாவின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கிறது. அது அகிலா எப்போது வருவாள் என்று காத்திருக்கிறது. புதர் மறைவில் ஒளிந்திருந்து நாய் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது" என்று கதையைக் கூறுங்கள்.
- படத்திலுள்ள உரையாடலை வாசித்துக் காட்டுங்கள். தொடர்ந்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் உரையாடி முழுக் கதையையும் குழந்தைகள் தெரிந்து கொள்ள வாய்ப்பு உருவாக்குங்கள்.
- முழுக்கதையையும் கூற ஓரிரு குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள்.

## சொல்லுங்கள்

நோக்கம்:

☸ புதிய சொல்லறிதல்

- பொம்மையைத் துரத்தியது யார்? என்று கேட்டுக் குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து கூறும் **நாய்** என்ற சொல்லைக் கரும்பலகையில் எழுதுங்கள்; வாசித்துக் காட்டுங்கள்; குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

தொடர்ந்து...

- பாடப்புத்தகத்திலுள்ள வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

### ஓர் எழுத்து மாறினால்...

நோக்கம்:

❁ கற்ற எழுத்தை வேறொரு சூழலில் பயன் படுத்துதல்.

- முதல் வரியிலுள்ள **'நாய்'** என்ற சொல்லைக் குழந்தைகளே வாசிக்கத் தூண்டுங்கள்.
- தொடர்ந்துள்ள படத்திலிருப்பது என்னவென்று கேட்டு **'பாய்'** என்று கூற வாய்ப்பளித்து **'பாய்'** என்றெழுதத் தூண்டுங்கள்.
- பாய் என்றெழுதச் சிரமப்பட்டால் நாய் என்ற சொல்லில் உள்ள **'ய்'** என்ற எழுத்தை இனம் காண உதவுங்கள்.
- 'பா' என்ற எழுத்தை நினைவு கூறச் சிரமப்பட்டால் 'பா' இடம் பெற்றுள்ள சொல் / எழுத்தட்டைகளைப் பயன்படுத்தி நினைவு படுத்துங்கள்.
- தொடர்ந்து வரும் 'காய், தாய்' என்ற சொற்களைக் குழந்தைகளே எழுதட்டும்.

**கண் மூடியே.....**

"என்னால் கண்களை மூடியேப டியே நீங்கள் சொல்லும் ...... தொட முடியும்" என்று சொல்லுங் கள். சில குழந்தைகள் உங்களி டம் படத்திலுள்ள ..................... பெயரைச் சொல்லட்டும். நீங்கள் கண்களை மூடியபடி படத்தைத் தொடுங்கள். நீங்கள் தொட்டது சரியா? சரியாக இல்லாவிட்டா லும் பரவாயில்லை. குழந்தைக ளிடம் நாம் தோற்றுப் போவது அவர்களிடம் ஆர்வத்தை உண் டாக்குமல்லவா?

அடுத்ததாக நீங்கள் ஒரு ............ பெயரைச் சொல்லுங்கள். நீங்கள் குறிப்பிடும் குழந்தை தன் கண் களை மூடியபடி தொட முயற்சி செய்யட்டும். பிற குழந்தைகள் சரியா? தவறா? எனச் சொல்லட் டும்.

### கலந்துரையாடல்

நோக்கம் :

❁ கலந்துரையாடலில் பங்கேற்றல்

- பாடப்பகுதியிலுள்ள வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

### சொல்லுங்கள்

நோக்கம் :

❁ படத்தை வாசித்துக் கருத்துணர்தல்.

❁ தான் வாசித்துப் புரிந்து கொண்டதைக் கூறுதல்.

பக்கம். 20-இல் உள்ள படத்தைப் பார்க்கத் தூண்டுங்கள். படத்தை வாசிக்கப் போதுமான அவகாசம் அளித்த பின்,

- படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
- படத்திலுள்ள சிறு குழந்தை யார்?

### நானே எழுதுவேன்

- கற்ற எழுத்துகளை இணைத்துச் சொல் உரு வாக்குதல்.
- வாசித்தல்
- எழுதுதல்

“சிறு வட்டங்களில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் நடு விலுள்ள எழுத்துடன் சேர்த்து எழுத வேண்டும். யார் முதலில் எழுதுகிறார்கள் என்று பார்ப் போமா?”

என்று சவால் விட்டு குழந்தை களை எழுதத் தூண்டுங்கள். எவ்வாறு, எத்தனைபேர் எழுதி யுள்ளார்கள் என்று மதிப்பி டுங்கள்.

- அகிலா என்ன செய்கிறாள்?

போன்ற வினாக்களைக் கேட்டு உரையாடிய பின்,

- அகிலா செய்தது சரியா? தவறா?
- நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

என்ற வினாக்களைக் கேளுங்கள்: கலந்துரையாடுங்கள்.

### நானே வாசிப்பேன்

நோக்கம்:

- ☸ எழுத்துகளை இனம் கண்டு சொற்களை வாசித்தல்.

“இப்பெட்டியிலுள்ள சொற்களை யார் யாரால் சரியாக வாசிக்க முடியும் என்று பார்ப்போமா?”

என்று சவால் விடுத்து இச்சொற்களைக் குழந்தைகள் தாமாக வாசிக்கத் தூண்டுங்கள்.

எவ்வாறு, எத்தனை பேர் வாசிக்கிறார்கள் என்று மதிப்பிடுங்கள்.

### அகிலாவிற்குப் பொம்மை செய்துகொடுப் போமா?

நோக்கம் :

- ☸ பொருட்களைப் பயன்படுத்தி பொம்மை செய்தல்.

பொம்மை செய்யத் தேவையான பொருட்கள் :

- ஸ்பான்ச், ரப்பர் பேண்டு, பொட்டு, சீக்வன்ஸ்

“அகிலா தனது பேசும் பொம்மையை ஒரு பாப்பாவிற்குக் கொடுத்தாள் அல்லவா ! நாமும் ஒரு அழகு பொம்மை செய்து பாப்பாவிற்குக் கொடுப்போமா?”

என்று கூறி பொம்மை செய்யத் தூண்டுங்கள்.

- பாடப்பகுதியிலுள்ள செய்முறையைப் பார்த்துக் குழந்தைகள் தாமாக பொம்மை செய்யட்டும்.

### செயல்திட்டம்

கற்றலில் பெற்றோரின் பங்களிப்பை உறுதிப்படுத்த இச்செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.

இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடாகச் செய்யத் தூண்டுங்கள்.

### நானே பாடுவேன்

நோக்கம் :

- ☸ பாடல்பாடுதல்

இதுவரை குழந்தைகள் கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி உருவான பகுதி இது. குழந்தைகள் தானாக வாசித்தால் இவ்வெழுத்துகளைக் கற்றுள்ளார்கள் எனக் கருதலாம்.

எல்லாக் குழந்தைகளும் தானாக வாசிக்கிறார்களா?

எந்த எழுத்தை / சொல்லை வாசிக்கச் சிரமப்படுகிறார்கள் என பொறுமையாகக் கவனித்து அவர்களுக்கு மாற்றுச் செயல்பாடுகள் நல்க வேண்டும்.

### கொஞ்சநேரம் கொஞ்சலாம்

நோக்கம் :

- நடித்தல்

அம்மா உன்னைக் கொஞ்சுகிறார்

ஆசிரியர் பாராட்டுகிறார் | குழந்தை அழுகிறது | தாத்தா கொஞ்சுகிறார்

பசிக்கும் குழந்தை அம்மாவிடம் உணவு கேட்கிறது

போன்ற செயல்கள் எழுதிய துண்டுக் காகிதங்களை ஒரு பெட்டிக்குள் இடுங்கள். குழந்தைகள் ஒரு துண்டுக் காகிதத்தை எடுக்கட்டும். தங்களுக்குக் கிடைத்த காகிதத்தில் உள்ளதை நடித்துக் காட்டட்டும்.

1. யாருக்காக பேசும் பொம்மை காத்திருந்தது?
2. பேசும் பொம்மை ஓடியது ஏன்?
3. வழி தெரியாத பொம்மை என்ன செய்தது?
4. அகிலா பேசும் பொம்மையை யாருக்குக் கொடுத்தாள்?

**சார்ட் 3**

பேசும் பொம்மை அகிலா விற்காகக் காத்திருந்தது.

நாய் துரத்தியதால் பேசும் பொம்மை ஓடியது.

பேசும் பொம்மை ஓடி ஒளிந் தது.

ஒரு ஆளிடம் செல்போன் வாங்கி போன் செய்தது.

ஏழைக்குழந்தைக்கு பேசும் பொம்மையை கொடுத்தாள்.

### படைப்புத் தொகுப்பு (Portfolio)

- கண்டுபிடியுங்கள் எழுதுங்கள்
- இங்கிருந்தும் அங்கிருந்தும்
- எனது குடும்பமரம்
- யாருக்கு என்ன வேலை?
- பொது முடிவு
- கணிதப் பயிற்சித் தாள்

### *பயிற்சித்தாள்*

## 1. படவாசிப்பு

- ஒரு திருமண நிகழ்ச்சியின் படத்தைக் காண்பியுங்கள். குழந்தைகள் படத்தைப் பார்த்து என்னென்ன உள்ளன என்பதைக் கூறட்டும்,

## 2. உரையாடுங்கள்

- பிறந்த நாள் பரிசாக உன் மாமா ஒரு பந்து பரிசாகத் தந்தார். அதைப் பற்றி நீ என்ன சொல்லுவாய்?

## 3. படம் வரையுங்கள், நிறம் கொடுங்கள்

- பிறந்த நாளுக்குப் பரிசாகக் கிடைத்த ஒரு பட்டத்தை வரைந்து பொருத்தமான நிறம் நல்கவும்.



## 4. வாசியுங்கள்

- பப்படம், கிட்டி, காப்பி, அம்மி, தத்தி

## 5. எழுதுங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சோறு ஊட்டுபவர் | |
| 2. | கதை சொல்லுபவர் | |
| 3. | தோட்ட வேலை செய்பவர் | |

## 6. குழுவில் சேராதது எது?

- தாடி, பாடி, மாடி, அடி
- மாமா, பாமா, பாட்டி, பட்டம்

## 7. மாதிரியைப் போன்று எழுதுங்கள்

| | | |
|---|---|---|
| படி | - | பாடி |
| தடி | - | ...... |
| ...... | - | காடி |

**8. சொற்களிலிருந்து சொற்கள்**

**அப்பா, பாட்டி** என்ற சொற்களிலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி உருவாக்கும்

புதிய சொற்கள் | | | |

**9. பெரியது எது? வட்டமிடுங்கள்**



**10. குட்டையானது எது? வட்டமிடுங்கள்**



| வ.எண் | | 01. | | | 02. | | | 03. | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சே.எண் | | 1032 | | | 1063 | | | 1024 | | | | | | | | | | | |
| மாணவர் பெயர் | | அரவிந்த் | | | ஆர்த்தி | | | இளவரசி | | | | | | | | | | | |
| தரம் | | A | B | C | A | B | C | A | B | C | | | | | | | | | |
| படவாசிப்பு | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| கலந்துரையாடல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| படம் வரைதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| இனம் கண்டு வாசித்தல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| பாடல் பாடுதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| கதை சொல்லுதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| சொற்களை இனம் காணுதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| எழுத்துக்களை இனம் காணுதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| எழுத்துக்களை இனம் கண்டு எழுதுதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| ஒலித்துணைக் குறியீடு பயன்படுத்துதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| புதிய சொற்ள் உருவாக்குதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |
| பாடலை முழுமையாக்குதல் | 1 | | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | | | | | |